# ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் – துணை போகும் அ.தி.மு.க.வையும்
# கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டம்!







ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க.வையும் – அதற்கு துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் சைதாப்பேட்டை, வேளச்சேரி பிரதான சாலையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட கழகம் சார்பில் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் கு.செல்வபெருந்தகை, தி.க. இரா.வில்வநாதன், கம்யூனிஸ்ட் (இடது) பெ.சண்முகம், கம்யூனிஸ்ட் (வலது) வகிதா நிஜாம், ம.தி.மு.க. மு.செந்திலதிபன், வி.சி.க – வன்னியரசு, ஐ.யூ.எம்.எல். – கே.ஏ.எம்.முகமது அபுபக்கர், ஆம்ஆத்மி வசீகரன் , த.வா.க தமிழரசன், கட்டிட தொழிலாளர் சங்கம் பொன்.குமார், தமிழ்மாநில தேசிய லீக் எம்.ராஜா, ம.நீ.ம. இரா.கதிர், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா, தாயகம் கவி, அம்பத்தூர் ஜோசப் சாமுவேல், மயிலை த.வேலு, நே.சிற்றரசு, வெற்றியழகன், ஜெ.கருணாநிதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






ஒன்றிய பட்ஜெட்டில் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வரும் பா.ஜ.கவையும் துணை போகும் அ.தி.மு.க வையும் கண்டித்து உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாலாஜாபாத்தில் பேரூர் செயலாளர். என் பாண்டியன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ முழக்கமிட்டு கண்டன உரையாற்றினார் உடன். ஒன்றிய செயலாளர்கள். பி சேகர்.கெ. ஞானசேகரன் டி. குமார் க. குமணன் பொதுக்குழு உறுப்பினர். திருமதி. எழிலரசி சுந்தரமூர்த்தி. உத்திரமேரூர் பேரூர் செயலாளர் என் எஸ் பாரி வள்ளல் வாலாஜாபாத் ஒன்றிய குழு தலைவர் ஆர் கே தேவேந்திரன் உத்திரமேரூர் பேரூராட்சி மன்ற தலைவர். பொன். சசிகுமார் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள். டி சஞ்சய் காந்தி. பெ. மணி. மற்றும் மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் இருந்தனர்.




திருவள்ளூர் மேற்கு மாவட்டம் சார்பில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன்,எம் எல். எ. தலைமையில் திருத்தணி கிழக்கு ஒன்றியம் புதிய பைபாஸ் சாலையில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பா.ஜ.க துணை போகும் அதிமுகவையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துக் கொண்டு கண்டன ஆர்ப்பாட்ட முழக்கங்களை எழுப்பினர். இதில் பெண்களும் பொதுமக்களும் திரளாக கலந்துக் கொண்ட ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய செயலாளர் பா.ஆர்த்தி ரவி, திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ம.கிரண், மதச்சார்பற்றமுற்போக்குகூட்டணிகட்சிநிர்வாகிகள்ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டைப் புறக்கணித்த, ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து! திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் நகர திமுக சார்பில் திருவள்ளூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நகர கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது இதில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் கண்டன உரையாற்றினார் உடன் நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், பொதுகுழு உறுப்பினர் எஸ்.கே.ஆதாம், நகரக் கழக நிர்வாகிகள் தி.ஆ.கமலக்கண்ணன், டி. எம். ரவி, என்.பரசுராமன், ராஜேஸ்வரி கைலாசம், இ.குப்பன், டி.சிவக்குமார், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் இந்நாள் முன்னாள் திமுக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்




ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டைப் புறக்கணித்த, ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து! கண்டன ஆர்ப்பாட்டம் திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் காக்களூரில் ஒன்றியச் செயலாளர் ஆர்.ஜெயசீலன் தலைமையில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார் இதில் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் டி.குமரேசன், நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், டி.கே.சீனிவாசன், டி.எம்.ராமச்சந்திரன், பரமேஸ்வரன், சாமுண்டீஸ்வரிசண்முகம், எஸ்.சௌந்தரராஜன், மற்றும் நிர்வாகிகள் கூட்டணி கட்சி தோழர்கள் உள்ளனர்




ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டைப் புறக்கணித்த, ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து! திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் வடக்கு ஒன்றியம் திருபாலைவனம் கடைவீதி பகுதியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் மு.முரளிதரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார் அருகில் தலைமை கழக பேச்சாளர் எழும்பூர் கோபிநாத், மாவட்ட சிறுபான்மையினர் நலகுழு அணி அமைப்பாளர் ஆ.முகமது அலவி, உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் திராவிட முன்னேற்றக் கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.




பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பாக ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த பாசிச பாஜக அரசையும் அடிமை அ.தி.மு.கவையும் கண்டித்து மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக் கண்டன முழக்கங்களை எழுப்பி கண்டன உரையாற்றினார் காங்– ஆர். எஸ். செந்தில்குமார் துணை மேயர் கோ. காமராஜ் மதிமுக மாவை மகேந்திரன் விசிக –த. தமிழரசன் கம்யூ.மா– எஸ். நரசிம்மன் முஸ்லிம் லீக் –முகமது பேக் மனிதநேய மக்கள் கட்சி ஏ. என். அப்துல் ரகுமான் மண்டல தலைவர்கள் வே. கருணாநிதி இ ஜோசப் அண்ணாதுரை பகுதி கழகச் செயலாளர்கள் த. ஜெயக்குமார் இ. எஸ். பெர்னார்ட் ஏ. கே. கருணாகரன் அ தமிழ் மாறன் உள்ளிட்ட 1000 க்கும் மேற்பட்ட திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பித்தார்கள்.




தாம்பரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த பாசிச பாஜக துணை போகும் அடிமை அதிமுகவையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் . தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா. எம், எல்,ஏ; தலைமையில் சண்முகம் சாலையில் போராட்டம் நடைபெற்றது. இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




கோவை மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பில், கோவை டாடாபாத்தில், ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை புறக்கணித்த பாஜக – துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ் செல்வன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கழக தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, மாநகராட்சி மேயர் கா. ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்பட கூட்டணி கட்சி தலைவர்கள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில், ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாஜகவையும், துணை போன அதிமுகவையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ வழிகாட்டுதலில், கரூர் மாவட்டத்தில் 32 இடங்களில் நடைபெற்றது. கரூரில் மாநகரம் சார்பாக, கரூர் தலைமை தபால் நிலையம் அருகில் நடைபெற்றது. மாநகரச் செயலாளர் எஸ் பி. கனகராஜ் தலைமை வகித்தார். மாநில நிர்வாகிகள் வழக்கறிஞர் என். மணிராஜ், கரூர் முரளி, துணை மேயர் தாரணி சரவணன், பூவை ரமேஷ்பாபு, பகுதி செயலாளர்கள் விஜிஎஸ்.குமார், சுப்பிரமணியம், ஆர் எஸ்.ராஜா, வெங்கமேடு பாண்டியன், ஜோதிபாசு, மற்றும் மாநில மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கிளைக் கழகச் செயலாளர்கள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டனர்.